# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனி - பிராங்போர்டிலுள்ள பைத்துந் நூர் பள்ளிவாயிலில்
## 18.12.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**குல் அமர ரப்பீ பில்கிஸ்தி வஅகீமூ வுஜூஹ(k)கும் இன்(d)த குல்லி மஸ்ஜிதிவ் வ(d)த்வூஹு மு(kh)ஹ்லிஸீன லஹு(d)த்தீன். கமா ப(d)தஅ(k)கும் தவு(d)த்தூன்** – நீர் கூறுவீராக: என் இறைவன் எனக்கு நீதியைக் (கடைப்பிடிக்குமாறு) கட்டளையிட்டுள்ளான். மேலும் நீங்கள் வணக்கத்தலம் ஒவ்வொன்றிலும் உங்கள் முகங்களை நேரான திசையில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் மார்க்கத்தில் உங்களை அவனுக்காகக் களங்கமற்றவர்களாய் ஆக்கிக் கொண்ட நிலையில் அவனையே அழையுங்கள். அவன் உங்களைத் தோற்றுவித்தது போல், நீங்கள் (அவனிடமே) திரும்புவீர்கள். (7:30)

**(th)தாயிபூனல் ஆ(b)பிதூனல் ஹமி(d)தூனஸ் ஸாயிஹூனர் ரா(k)கிவூனஸ் ஸாஜிதூனல் ஆமிரூன பில்மஃரூஃபி வன்னாஹூன அனில் முன்(k)கரி வல் ஹாஃபிலூன லிஹு(d)தூ(d)தில்லாஹ். வபஷ்ஷிரில் முஃமினீன்** – கழிவிரக்கக் கொள்பவர்கள், வணங்குபவர்கள், (இறைவனைப்) புகழ்பவர்கள், நோன்பு நோற்பவர்கள், (இறைவனிடம்) குனிபவர்கள், (தொழுகையில்) சிரம்பணிபவர்கள், நன்மையை ஏவுபவர்கள், தீயவற்றிலிருந்து தடுப்பவர்கள், அல்லாஹ்வின் வரம்புகளைப் பாதுகாப்பவர்கள் ஆவார்கள். (இத்தகு தன்மைகளைக் கொண்ட நம்பிக்கை கொண்டவர்களுக்கு நீர் நற்செய்தியினை வழங்குவீராக! (9:112)

இன்று மஸ்ஜித் நூர் பிராங்போர்டிலிருந்து அப்பள்ளியின் முதல் குத்பாவை கொடுக்கிறேன். ஜெர்மனி அஹ்மதிகளுக்குத் தெரியும்; இந்தப் பள்ளிவாயில் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அன்றிருந்த ஜமாஅத்தின் நிதிவசதிகளுக்கு ஏற்ப இப்பள்ளிவாயில் கட்டப்பட்டிருந்தது. இன்று அஹ்மதிகளின் எண்ணிக்கைக்கு இப்பள்ளிவாயிலால் ஈடுகொடுக்க முடியவில்லை. சிறிய பள்ளிவாயில் என்பதால் குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் மட்டுமே இங்கு தொழுகைக்கு வருமாறு அனுமதிக்கப்பட்டிருந்தது. இது ஜெர்மனி ஜமாஅத்தின் இரண்டாவது பள்ளியாகும். இது ஜெர்மனியில் கட்டப்பட்ட இரண்டாவது பள்ளிவாயிலும் ஆகும். முதல் பள்ளிவாயிலில் 2007-ல் 50 ஆண்டுகள் நிறைவடைந்திருந்தது என்று நினைக்கிறேன். அந்த நிறைவு விழாவில் அப்போது நான் கலந்து கொள்ளவில்லை. இப்போது பிராங்போர்டின் இந்த இரண்டாவது பள்ளிவாசலின் நிறைவு விழாவை நடத்த ஜெர்மனி ஜமாஅத் விரும்பியது. இதில் சில பெரிய மனிதர்களை அழைக்க ஜெர்மனி ஜமாஅத் விரும்பியது. உடனே ஜெர்மனி அமீர் சாஹிப் என்னையும் இவ்விழாவில் கலந்து கொள்ள முயற்சி செய்யுமாறு வேண்டினார். எனவே நான் மஸ்ஜிதின் 50 ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு ஜுமுஆ தொழுவதற்காக வந்துள்ளேன். நான் ஏற்கனவே கூறியது போன்று பெரிய மனிதர்கள் சிலர் இவ்விழாவில் அழைக்கப்பட்டிருப்பதால் அவர்களிடம் சில விஷயங்களைக் கூறுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில் தான் இங்கு வர விரும்பினேன். இஸ்லாமிய போதனைகளை அவர்களிடம் நேரடியாக எடுத்து வைக்க வேண்டும் என்று விரும்பினேன். நான் அங்கிருந்தே சொற்பொழிவு நிகழ்த்தினாலும் கூட குரல் வந்து சேர்ந்து விடும் என்றாலும் இங்கு வந்து நேரடியாக கூறுவதற்கு விரும்பி வந்துள்ளேன். நமது பள்ளிவாயில்கள் அதிகமாக கட்டப்பட்டும் வருகின்றன. ஏற்கனவே உலகம் முழுவதும் நமது பல மஸ்ஜிதுகள் பரவியும் உள்ளன. அவற்றை நிர்மாணித்து 50 ஆண்டுகள், 70 ஆண்டுகள் ஏன் சிலவற்றிற்கு 100 ஆண்டுகள்கூட நிறைவடைந்து விட்டன.

50 ஆண்டுகள அல்லது 100 ஆண்டுகள் நிறைவடைவதில் பள்ளிவாயில்களுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. பள்ளிகளின் முக்கியத்துவம், அழகு அனைத்தும் அதில் தொழ வருபவர்களைக் கொண்டுதான் கிடைக்கிறது. அல்லாஹ்வின் தக்வாவுடன் அவர்கள் தொழுகைக்கு வருகின்றனர்.

பள்ளிவாசலுக்கு அழகு சேர்க்கின்றனர். பள்ளிகளின் தகுதி அதன் முக்கியத்துவம் குறித்து திருக்குர்ஆனில் வழிகாட்டல் கிடைக்கிறது. ஓர் அஹ்மதி பள்ளிவாசலின் அந்தஸ்த்தைப் புரிந்து கொண்டிருப்பதை வைத்துதான் அவருக்கு கண்ணியம் கிடைக்கிறது. பள்ளிவாசலின் அந்தஸ்து எத்தகையது என்பதை இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான். இது சம்பந்தமாக நான் சில விஷயங்களை இந்த குத்பாவில் கூறுவேன். ஆனால் அதற்கு முன் இந்தப் பள்ளியின் முக்கியத்துவம் குறித்து சிறிது கூறுவேன். இந்தப் பள்ளியின் பெயர் மஸ்ஜித் நூர் ஆகும். இங்குள்ள அஹ்மதிகளுக்கு தெரியும்; உலகின் மற்ற பகுதியிலுள்ள அஹ்மதிகளிலும் சிலர் தெரிந்திருக்கலாம்.

தற்செயலாக கடந்த இரு குத்பாக்களில் **நூர்** -ன் பொருளை விளக்கினேன். அல்லாஹ்வின் நூர் என்ற பண்பு குறித்தும் விளக்கினேன். இந்தப் பள்ளி மட்டுமல்ல. நவது எல்லாப் பள்ளிகளும் அந்த அல்லாஹ்வின் ஒளியை உள்ளத்தில் நிலைநிறுத்தவும் உலகில் பரப்பவுமே உருவாக்கப்படுகின்றன. பிரித்தறிவதற்காக பள்ளிவாசல்களுக்கு என்ன பெயர் வைக்கப்பட்டாலும் உருவாக்கப்படுவதன் நோக்கம் இதுதான். அவ்வொளியை அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலம், திருக்குர்ஆனின் மூலம் நம் மீது இறக்கினான். பிறகு அதன் உண்மையான பிரதிபிம்பமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் ஏற்படுத்தினான். அந்த நூர் அதன் மூலம் எல்லா பக்கமும் பரவுகிறது. நமது மஸ்ஜிதுகளின் நோக்கம் அதுவேயாகும்.

இன்னொரு தற்செயலான ஒரு நிகழ்வு குறித்தும் நான் கூறுவேன். சுவிட்சர்லாந்து அரசின் துர்பேறு இஸ்லாத்தின் எதிரியாக விளங்கும் ஒரு Party-கள் தூண்டியதற்கிணங்க சுவிட்சர்லாந்தில் இனி பள்ளிவாசல்கள் கட்டப்பட்டால் அதில் மினாரா கட்டக் கூடாது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அந்த முடிவை எடுப்பதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 32% மக்கள் மட்டும் தான் மினாரா கட்டக்கூடாது என்று வாக்குறுதி அளித்திருந்தார்கள். மற்ற பொதுமக்கள் எவரும் அதுபற்றி தெரியாதவர்கள அல்லது மினாரா கட்டக்கூடாது என்ற முடிவை விரும்பாதவர்கள் என்ற Report-ம் நமக்கு கிடைத்துள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் ஜமாஅத் தான் இப்பணிகளை இங்கு ஆற்றி வருகிறது. மற்ற ஜமாஅத்துகள் எல்லாம் இங்கு உறங்கிக் கொண்டு தான் இருந்தன. மினாரா சம்பந்தமான இந்த பிரச்சனையில் பெரிதாக எதிர்க்க என்ன இருக்கிறது? என்று கூட சில பிரிவினர் கேட்கின்றனர். அதே வேளையில் இந்த சட்டத்திற்கு எதிராக ஜமாஅத் அஹ்மதிய்யா மட்டும்தான் முன்னரும் அரசிடம் முறையிட்டது. தமது எதிர்ப்பை எடுத்துக் கூறியது. இப்போது இதுதான் செய்து வருகிறது. இந்த சட்டத்திற்கு எதிராக பொதுக் கூட்டங்களும் நடத்தி மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளது. சில அரசியல் அமைப்புகள் இச்சட்டத்திற்காக நம்மிடம் வருத்தம் தெரிவித்துள்ளன. எமக்கும் இந்த சட்டத்தில் விருப்பம் இல்லை. நாங்களும் இச்சட்டத்தை எதிர்த்துள்ளோம் என்று கூறுகின்றன. சுவிட்சர்லாந்தில் உள்ள நமது மினாராவைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ள மக்கள் நமக்கு ஆதரவாக குரல் எழுப்பினர். வீதிகளுக்கு வந்தனர். அடுத்தவரின் மத உணர்வுகளுக்கு எதிராக விளையாடுவது மிகவும் அறிவீனமான செயல் என்று குரல் எழுப்பினர். இந்த மினாரா இடிப்புக்கு ஆதரவாகப் பேசி எதிர்க்கட்சி பெயர் வாங்கி விட்டதாக கருதி இங்குள்ள ஓர் அரசியல் கட்சி தலைவர் தன் சார்பாக ஏதாவது கூறி பெயர் வாங்க வேண்டும் என்று கருதி முஸ்லிம்களின் பர்தா முறைக்கு இங்கு தடைவிதிக்க வேண்டும். முஸ்லிம்களுக்கு இங்கு இன்னும் சில கட்டுப்பாடுகளை இங்கு விதிக்க வேண்டும் என்று கூச்சலிடத் தொடங்கினார். அதே கட்சியின் மாநில தலைவர்கள் அக்கட்சியின் தேசத்தலைவரின் கூற்று கேட்டு அதிருப்தி தெரிவித்துள்ளனர். தேசத்தலைவர் டிவியில் தோன்றி தமது கருத்துக்காக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூறினர். அந்த மாநில தலைவருக்கு நமது அமீர் சாஹிப் (சுவிட்சர்லாந்து) கடிதம் எழுதினார். தேசத்தலைவர் தமது வழியை விட்டு தடம் புரண்டுள்ளார். இப்போது சரியான வழிகாட்டலை நீங்கள் அவருக்கு வழங்கியுள்ளீர்கள். நல்ல விஷயங்களுக்கு குரல் கொடுப்பவர்கள் எல்லா இடத்திலும் இருக்கின்றனர். ஜமாஅத் அஹ்மதிய்யா மட்டுமே இஸ்லாத்திற்காக உலகின் எல்லா பகுதிகளிலும் தற்காப்பு செய்கிறது. ஜமாஅத்தின் எதிர்ப்பை கேட்ட பிறகுதான் அரசியல்வாதிகளுக்கே இதன் பக்கம் கவனம் திரும்பியது. இந்த சட்ட விரோதமான போக்கை எதிர்க்க வேண்டும் என்று தோன்றியது.

இஸ்லாத்தின் பெயர்தாங்கி பாதுகாவலர்கள் தாம் ஒருவருக்கொருவர் திட்டிக் கொள்வதும், அப்பாவிகளின் உயிர்களுடன் விளையாடுவதும் ஆகிய ஒரே வேலையை மட்டும்தான் செய்கின்றனர். அதற்குமேல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) உடைய வருகைக்கு இப்போது என்ன தேவை ஏற்பட்டுவிட்டது? என்றும் வேறு கேட்கின்றனர். எந்த ஆன்மீக தலைவரின்தேவையும் எமக்கில்லை. எங்களிடம் கடைசி ரசூலாக ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களும், கிதாபேமூபினின் வடிவில் திருக்குர்ஆனும் இருக்கின்றன என்று கூறுகின்றனர். சரிதான் நாமும் அதையே கூறுகின்றோம். எனினும் அந்த ஒளியில் இருந்து பங்குபெறுவதற்காக அல்லாஹ் அவனது ரசூல் (ஸல்) உடைய முன்னறிவிப்புக்கேற்ப **அந்நூர்**-ஐ உள்வாங்கி அதனை உலகில் பரப்பக்கூடிய ஒருவரின் தேவை ஏற்பட்டது. அந்த வேலையை செய்வதற்காக ஜமாஅத் அஹ்மதிய்யா மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளது என்பது எமது அதிகப்படியான ஓர் ஈமான் ஆகும். அந்த பொறுப்பு நமக்கே உள்ளது. சுவிட்சர்லாந்தில் மட்டுமல்ல. ஸ்பெயினின் மிகப்பெரிய ஒரு சேட்டிலைட் சேனல் நமது பள்ளியின் படத்தையும் காட்டி இந்த செய்தியை வெளியிட்டது. அங்குள்ள உள்ளூர் மக்களின் நேர்காணல் நிகழ்ச்சியையும் ஒளிபரப்பியது. அவர்கள் அனைவரும் இந்த சட்டம் மிகவும் தவறான சட்டம் என்றே கூறினர். நமது பகுதியில் இந்த பள்ளி உள்ளது. இங்கிருந்து இம்மக்கள் அமைதியின் தூதுச்செய்தியைத் தான் பரப்புகின்றனர் என்று ஒருவர் கூறினார்.

நீங்கள் தீவிரவாதத்தை எதிர்க்கிறீர்கள் வெறுப்பை ஒழிக்க வேண்டும். துவேஷம் அகல வேண்டும் என்கிறீர்கள். ஆனால் உண்மையில் அமைதியை விரும்பும் மக்கள் இவர்களே. நீங்களும் இவர்களைப் போன்று ஆக வேண்டும் என்று கூட இன்னொருவர் அந்த இண்டர்வியூவில் கூறியிருந்தார்.

இந்த புரட்சியைத்தான் ஹஸ்ரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) இடம் இருந்து பயிற்சி பெற்று இந்த ஜமாஅத் உலகில் செய்து வருகிறது.

இந்த மக்கள் சிலகாலம் முஸ்லிம்களிடம் முகமன் கூறுவதற்கு கூட அஞ்சினர். இன்று இம்மக்கள் டிவியில் தோன்றி பகிரங்கமான அறிவிக்கின்றனர். ஸ்பெயினில் அமைதி நிலவ வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அஹ்மதிகளைப் போன்று மாறுங்கள். இவர்கள் இஸ்லாத்தில் அழகிய போதனையின்படி உலகில் நடந்து காட்டுகிறார்கள். இன்று இவர்களே அமைதியின் அடையாளமாக விளங்கும் மக்கள் என்று அறிவிப்பு செய்கின்றனர்.

எனவே மஸ்ஜிதுகளின் மினாராவை தடுப்பது மிகவும் அறிவீனமான ஒரு சட்டமாகும். மினாரா கட்டாவிட்டால் எல்லா முஸ்லிம்களின் தீவிரவாதச் செயல்களும் தடுக்கப்பட்டுவிடுமா? மிகவும் சிறுபிள்ளைத்தனமான விஷயமாகும். மினார் என்ற சொல் நூர் ல் இருந்து வந்துள்ளது. ஒரே இறைவனை வணங்குவதற்காக உயர்ந்த இடத்திலிருந்து மக்களை அழைக்கும் குரலை எழுப்ப வேண்டும். அதுவே மினார் கட்டப்படுவதின் நோக்கமாகும். ஆரம்ப காலங்களில் மின்சாரம் மற்றும் ஒலி பெருக்கி வசதிகள் இருந்ததில்லை. மினாராவில் நின்றுதான் பாங்கு சொல்லப்பட்டது. இப்போது மினாராக்கள் ஓர் அடையாளமாக கட்டப்படுகின்றன. சில இடங்களில் ஒலிபெருக்கி அதில் வைக்கப்படுகின்றன. முஸ்லிம் நாடுகளில் அவ்வாறு செய்யலாம். இங்கு அதற்கு அனுமதியில்லை. எவ்வாறிருப்பினும் மினாராக்களுக்கு சில நோக்கங்கள் உள்ளன. அதனை நீங்கள் ஆட்சேபிப்பீர்கள் எனில் சர்ச்களின் உள்ள கோபுரங்களை ஆட்சேபிக்கலாம். ஆனால் ஆட்சேபனை செய்வது நமது நோக்கமல்ல. பாங்கு ஒலி கொண்டு சேர்ப்பது மினாராக்களின் நோக்கம் என்று கூறினேன். பாங்கு என்றால் என்ன? அதன்மூலம் இறைவனின் பெருமை எடுத்தியம்பப்படுகிறது. அவனது ஏகத்துவம் எடுத்தியம்பப்படுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) இறைதூதர் என்று பிரகடனம் செய்யப்படுகிறது. இபாதத்தின் பக்கம் அழைக்கப்படுகிறது. ஏன்? ஏனெனில் அதுவே மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கமாகும். அதில்தான் மனிதனுக்கு வெற்றி உள்ளது. எனவே வெற்றியின் பக்கம் வாருங்கள். உங்கள் மார்க்கமும் மறுஉலகும் உங்களுக்கு கிடைப்பதற்காக உங்கள் உலகும் கூட கிடைப்பதற்காக இங்குவாருங்கள் என்று அழைக்கப்படுகிறது. இது எவ்வளவு அழகியதூதுச் செய்தி! அதுதான் இந்த மினாராக்கள் மூலம் உலகிற்கு வழங்கப்படுகிறது. சர்ச்களிலும் தான் பெரிய கோபுரங்கள் உள்ளன என்று நாம் ஆட்சேபனை செய்ய முடியும். இருந்தும் நாம் ஆட்சேபனை செய்யவில்லை. ஏனெனில் எந்த மார்க்கத்தினரின் உணர்வுகளுடனனும் விளையாடுவது நமது நோக்கமல்ல. ஒவ்வொருவரின் கோவில், சர்ச்

அனைத்தையும் கண்ணியம் செய்கிறோம். திருக்குர்ஆன் எல்லா வழிபாட்டுத்தலங்களையும் கண்ணியப்படுத்துமாறு கூறுகிறது. அதுமட்டுமல்ல அந்த வழிபாட்டுத்தலங்களை பாதுகாக்கும் பொறுப்புகூட முஸ்லிம்களிடம் போடப்பட்டுள்ளது. அதன்மூலமே அன்பு உலகில் நிலைநிற்கும். பிராங்போர்ட்டின் இந்த மஸ்ஜித் முதன்முதலாக 50 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட போது இந்த பள்ளியின் மினார் பற்றி பத்திரிக்கைகள் எழுதின. அப்போது ஜெர்மனியில் 70க்கு மேற்பட்ட பத்திரிக்கைகள் இந்த பள்ளியின் திறப்பு விழா பற்றிய செய்தியை வெளியிட்டனர். உதாரணமாக ஒரு பத்திரிக்கையின் ரிபோர்டர் ருவுன்ஷா. இது 14 டிசம்பர் 1959-ல் எழுதுகிறது. பிராங்போர்டில் ஒரு வெள்ளிநிற பள்ளி ஒன்று உள்ளம் கவரும் உயரிய மினாராவுடன் கட்டப்பட்டுள்ளது. இன்னொரு பத்திரிக்கை ஆவன்போஸ்ட் பத்திரிக்கை எழுதியது. பிராங்போர்டில் அல்லாஹ்வின் வீடு கட்டப்பட்டது. மென்ஹைமின் ஒரு பத்திரிக்கை இஸ்லாம் ஐரோப்பாவில் வளர்ச்சி என்ற தலைப்பு கொடுத்து இச்செய்தியை வெளியிட்டது. அது கூறியது முஹம்மதியன் சீடர்கள் முதலில் வாளின் உதவியால் தெற்கு பிரான்ஸ் வந்தனர். இப்போது இவ்வேலை ஆன்மீக ஆயுதங்கள் மூலம் நடக்கிறது. அதிக அளவில் இஸ்லாமிய நாடுகளில் இருந்து மக்கள் ஐரோப்பாவிற்கு வருகின்றனர். இஸ்லாத்தை பரப்பு முயன்று வருகின்றனர். இஸ்லாத்தை பரப்பும் பல பிரிவுகளுள் ஒரு பிரிவு சிறப்பான வேகத்துடன் பள்ளிகளை கட்டி வருகிறது. இவ்வியக்கம் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) உடையது. இவர் இந்தியாவில் 1890 நிறுவினார். என்று எழுதியுள்ளது. ஜமாஅத் நிறுவிய ஆண்டை சிறிது தவறாக எழுதியுள்ளது. 1889க்குபதில் 1890 என்று எழுதிவிட்டது. இருந்தாலும் செய்தியை வெளியிட்டது.

மிகச்சிலரே அப்போது ஜெர்மனியில் இருந்தனர். அவ்வாறிருந்தும் தமது சிறப்பினால் அவர்கள் இவ்வளவு பரந்த அளவில் செய்திகளை வெளியிட வைத்தனர். இப்போது ஜமாஅத்தில் எண்ணிக்கை அளவிலும் வாய்ப்புகள் அடிப்படையிலும் மிகவும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போது ஜெர்மனி ஜமாஅத்தின் அதற்கேற்ப முயற்சியும் செய்ய வேண்டும்.

மஸ்ஜித்களின் மினார்கள் முற்காலத்தில் உள்ளம் கவருபவையாக இருந்தது போன்று இக்காலத்திலும் உள்ளம் கவருபவைதான். இன்றும் மேற்கத்திய நாடுகளில் உள்ள சில அரசியல்வாதிகளின் நீதியின் பார்வை போய் விட்டது. ஒரு சிலரின் குற்றத்தை ஒட்டுமொத்த சமுதாயத்தின் மீதும் போடுகின்றனர். இஸ்லாத்தின் பெயரையே அவப்பெயராகக் முயற்சி செய்கின்றனர்.

சிலர் பத்திரிக்கைகாரர்கள் டிவிக்கள் கூட தவறான ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றனர். உதாரணமாக டிவியில் ஒரு செய்தி வந்தது. ஒரு முஸ்லிம் தமது 15 வயது மகளை கொன்றுவிட்டார். செய்தியை அந்த டிவி இவ்வாறு தலைப்பிட்டு ஒளிபரப்புகிறது. முஸ்லிம் ஒருவர் தனது 15 வயது மகளை கொன்றார்.

இவ்வாறான குற்றங்களை மேற்கத்திய நாடுகளில் வாழ்பவர்களும்தான் செய்கின்றனர். தற்காலத்தில் அதுபோன்ற பல செய்திகளை அதனைவிட கொடூரமான செய்திகள் எல்லாம் பத்திரிக்கையில் வரத்தான் செய்கின்றன. ஆனால் அதனைப்பற்றி ஒரு கிறித்தவர் கொலை செய்துவிட்டார் என்று செய்தி வெளியிடுவதில்லை. இன்ன யூதர் கொலை செய்துவிட்டார் என்று வெளியிடுவதில்லை. அல்லது இன்னின்ன குற்றங்களை இன்ன மதத்தவர் செய்துவிட்டார் என்று கூறுவதில்லை. ஆனால் ஒரு முஸ்லிம் குற்றம் செய்தால் மட்டும் அது இஸ்லாத்தின் பெயரால் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. இவையனைத்தும் இஸ்லாத்துக்கு எதிராக சதியை வெளிப்படுத்துகின்றன. மேற்கத்திய நாடுகளின் முஸ்லிம்கள் தமது நிலையை மாற்றிக்கொள்வது அவர்கள் மீது கடமையாகும். இஸ்லாத்தின் அழகிய போதனையை அவர்கள் முன் எடுத்துவையுங்கள்.

இன்று இந்த வேலையை ஒவ்வொரு வரும் செய்யவே முடியாது. முழுக்க முழுக்க அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே இப்பணிக்காக விதிக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) உடைய உண்மை பேரண்பரின் பைஅத்தின்கீழ் வந்தவரின் பணியாகும். ஆகவே அஹ்மதி தமது பொறுப்பை உணர வேண்டும்.

பள்ளிகள் அதன்மினார்கள் மூலம் இஸ்லாத்தின் ஒளியை ஐரோப்பாவின் மூலம் முடுக்குகளில் எல்லாம் பரப்புங்கள். ஜலஸாவிலும் இதுகுறித்து உங்களுக்கு நான் கவனமூட்டினேன். மஸ்ஜித்துகளை

தொடர்பு வைத்து தக்வாவைக் கொண்டு அவனிடம் உதவி கேட்டவாறு இப்பணியை செய்ய முயற்சிக்கும்போது தான் அப்பணியை செய்திட இயலும்.

மஸ்ஜித் உடைய தகுதியை ஸ்தானத்தை எப்போதும் கவனத்தில் வைக்க வேண்டும்.

நான் ஓதிய வசனத்தில் இதுசம்பந்தமாக கூறப்பட்டுள்ளது. நான் ஓதிய முதல் வசனம் சூரா அஃராப் உடையது. அதில் வருகிறது. நீர் கூறுவீராக! என் இறைவன் நீதியை (கடைபிடிக்குமாறு) கட்டளையிட்டுள்ளான். மேலும் நீங்கள் ஒவ்வொரு வணக்கத்தலத்திலும் உங்கள் முகங்களை நேரான திசையில் வைத்துக்கொள்ளுங்கள். மேலும் மார்க்கத்தில் உங்களை அவனுக்காக களங்கமற்றவர்களாக ஆக்கி கொண்ட நிலையில் அவனையே அழையுங்கள். அவன் உங்களை முதலில் தோற்றுவித்ததுபோல நீங்கள் திரும்புவீர்கள் (7:30)

இது எத்தகைய அழகிய போதனை! மஸ்ஜித் தீவிரவாதிகளின் கூடாரம் என்று கூறுகின்றனர். இந்த வசனத்தில் முதல் கட்டளையே நீதியை நிலைநாட்டுங்கள் என்பதுதான். பிறகு பள்ளியின் கடமையை நிறைவேற்ற அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ்விற்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கு எல்லாவிதாமாக நீதிக்கு புறம்பான காரியங்களில் இருந்தும் உள்ளத்தை தூய்மையாக்குங்கள்.

திருக்குர்ஆனில் இன்னும் பல இடங்களில் இதுகுறித்து கவனமூட்டப்பட்டுள்ளது. **வ இஸா ஹகம்தும் பைனன்னாஸி அன் தஹ்குமூ பில் அத்ல்** – நீங்கள் மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கும் போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டும். (4:54) இது எத்தகைய அழகிய போதனை! முஸ்லிம்களுக்கு மத்தியில் மட்டும் நீதியுடன் இருங்கள் என்று கூறப்படவில்லை. மனித குலத்திற்கு பேருபகாரமாகியவரின் மீது இறங்கிய போதனை முழு மனிதகுலத்தின் மேன்மைக்காகவே இறங்கியது. இன்னொரு இடத்தில் இதனை இவ்வாறு கூறுகிறான்.

ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகைமை உங்களை நீதியில் இருந்து தடுத்துவிட வேண்டாம்.(5:9)

குழப்பம் விளைவிக்கும் நோக்கில் கட்டப்பட்ட பள்ளியை வீழ்த்துமாறு இறைவன் திருக்குர்ஆனில் கட்டளையிட்டுள்ளான். (9:107–110)

தக்வாவின் மீது நிலைநின்றவாறு நீதியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது தான் மஸ்ஜிதுகளின் நோக்கமாகும். மேலும் அல்லாஹ்வின் முன் மேலும் குனிவதற்காகவவே பள்ளிவாசலுக்கு வரப்படுகின்றது.

மஸ்ஜித் என்ற சொல் ஸஜ்தாவில் இருந்து வெளிப்பட்டுள்ளது. அதன் பொருள் பணிவு, எளிமையிலும் உச்சகட்ட எல்லை. மஸ்ஜித் இந்த உயரிய நல்லொழுக்கத்தை உருவாக்கும் இடமாகும். இந்த வசனத்திலும் அதற்காகவே கட்டளையிடப்பட்டுள்ளது. தொழுகை நேரம் வந்தால் மஸ்ஜிதில் ஒன்றாகக் கூடி அல்லாஹ்வின் முன் குனிந்து தமது குறைபாட்டை அவன்முன் எடுத்து வைத்து நீயே எம்மை நேர்வழியில் நடத்த வேண்டும். எமக்கு ஸஜ்தாவின் ரூஹை உருவாக்க வேண்டும் என்று துஆ இறைஞ்ச வேண்டும்.

நீயே எம்மை மார்கத்துக்காக களங்கமற்ற முறையில் உனது கட்டளைகளை நிறைவேற்றபவர் ஆக்க வேண்டும். நீதியின் படி அமல் செய்பவர்களாக வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ்வே நீயே உனக்கு ஆற்றவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் எமக்கு கவனம் ஏற்படுத்த வேண்டும். அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும். இதற்காகவே இன்று நாங்கள் உன் முன் ஸஜ்தாவில் வீழ்ந்துள்ளோம். அதற்கு எமக்கு தவ்ஃபீக் வழங்குவாயாக.

ஒரு முஃமின் ஆகிரத்தின் இறைவன் முன் நிற்க வேண்டும் என்று நம்புகிறார். அவர் ஒருபோதும் அவரை ஆகிரத்தின் வெகுமதிகளில் இருந்து விலக்கும் காரியத்தை செய்யவே முடியாது. அவரது ஒவ்வொரு அமலும் அவரது தகுதியை உயர்த்த காரணமாக இருக்கின்றது.

ஒவ்வொரு நன்மையிலும் முன்னேற்றம் இல்லையெனில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படவும் சாத்தியம் இல்லை. ஒரு முஃமின் இறைவனது திருப்தியை நாடி தூய்மையான உள்ளத்துடன் மஸ்ஜிதுக்கு வந்துவிட்டு

பிறகு அந்த மஸ்ஜிதுல் இருந்து வெறுப்பின் ஓசையைப் பரப்புவார் என்ற பேச்சுக்கே இடமில்லை. இவர் உலகின் குழப்பத்துக்கு காரணமாகி விடுவார் என்ற பேச்சுக்கே இடமில்லை. மஸ்ஜிது அல்லாஹ்வின் கடமையை நிறைவேற்றல் அடியாரின் கடமையை நிறைவேற்றல் ஆகியவற்றின் பக்கம் அடியெடுத்து வைப்பதற்கு ஓர் அடையாளமாகும். மினாரா அதனை நிறைவேற்றும் ஓர் வழியாகும். அதன் மீது நின்று கொண்டு ஒளியின் பக்கம் அழைப்புவிடப்படுகிறது. மனிதனின் பிறப்பின் நோக்கத்தையும் எடுத்துக்கூறி உலகம் மற்றும் மறுமை இரண்டையும் ஒளியமயமாக்குவதற்காக அதன்மீது நின்றவாறு அழைப்புவிடப்படுகிறது. இன்று அஹ்மதிகளாகிய நம்மீது கடமை என்னவெனில், உலகிற்கு இஸ்லாத்தின் தத்துவம் என்ன என்பதை எடுத்துரைக்க வேண்டும். மஸ்ஜிதின் தத்துவம் என்ன என்பதை எடுத்துரைக்க வேண்டும். உலகின் நிலைப்பு, அதோடு தொடர்புடையது. ஓர் இறைவனை நம்பியவாறு அல்லாஹ்வின் ஒளியைத் தேடுங்கள். உலகில் அது தென்படுகிறதென்றால் அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மட்டும்தான் தென்படுகிறது. அது தென்படுகின்றதென்றால் அந்த மாநபியின் மீது இறங்கிய இறுதி ஷரீஅத்துடைய வேதத்திடம் தென்படுகிறது. அதன் அழகிய போதனை உலகின் நிலைப்பிற்குரிய ஒரே வழியாகும். அதன் போதனை அல்லாஹ்விற்குரிய கடமையையும் அடியார்களுக்குரிய கடமையையும் காட்டும் ஒரே வழியாகும். அதன் அழகிய போதனை உலகின் அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கிறது. ஏனெனில் அந்த போதனையின்படி நடப்பவர்களைப் பற்றி திருக்குர்ஆன் கூறுகிறது. அதனை, நான் ஓதிய இரண்டாவது வசனம் கூறுகிறது. அவர்கள் கழிவிரக்கம் கொள்பவர்கள், வணங்குபவர்கள், (இறைவனைப்) புகழ்பவர்கள், நோன்பு நோற்பவர்கள், (இறைவனிடம்) குனிபவர்கள், (தொழுகையில்) சிரம் பணிபவர்கள், நன்மையை ஏவுபவர்கள், தீமையைத் தடுப்பவர்கள், அல்லாஹ்வின் வரம்புகளைப் பாதுகாப்பவர்கள். (இத்தகு நன்மைகளைக் கொண்ட) நம்பிக்கை கொண்டவர்களுக்கு நீர் நற்செய்தியினை வழங்குவீராக. (9:112)

இதுவே மூஃமின்களின் சிறப்புத்தன்மையாகும். ஒரு மூஃமின் தக்வாவை மேற்கொண்டவாறு அவனது திருப்தியைப் பெற முயற்சி செய்கிறார். அத்தகைய மூஃமினிடம் மேற்கண்ட சிறப்புகள காணப்பட வேண்டியது அவசியமாகும்.

முதல் சிறப்பு, அவர் தவ்பா (கழிவிரக்கம்) செய்பவராக இருப்பார். தவ்பா என்றால் என்ன? தீமைகளுடன் தொடர்பை துண்டிப்பதாகும்.

**இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

மனிதர் தவ்பா செய்தால் முழுமையான களங்கமற்ற தவ்பா செய்ய வேண்டும். தவ்பா என்பது மீளுதல் ஆகும். வெறும் நாவினால் தவ்பா தவ்பா என்று கூறிக் கொண்டு அலையுங்கள் என்று அல்லாஹ் கூறவில்லை. மாறாக இறைவணக்கத்தின் பக்கம் திரும்புங்கள் என்று கூறியுள்ளான். ஏனெனில் ஒரு மனிதன் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்தை நோக்கி செல்லச் செல்ல புறப்பட்ட இடத்தைவிட்டு இடைவெளி அதிகமாகி சேர வேண்டிய இடம் நெருங்கிக் கொண்டே செல்கிறது. இதுவே தவ்பா ஆகும். மனிதன் இறைவனிடம் திரும்பத் தொடங்கும் போது நாளுக்கு நாள் அவன் பக்கம் நெருங்குகிறான். கடைசியில் அவன் ஷய்த்தானை விட்டு தூர விலகிவிடுகிறான். இறைவனை நெருங்கி விடுகிறான்.

பிறகு இறைவன் மூஃமீனின் இரண்டாவது சிறப்புப் பண்பாக கூறுகிறான். அவர்கள் இபாதத் செய்பவர்கள். இறைவன் பக்கம் அடியெடுத்து வைக்கும் போது களங்கமற்ற முறையில் செய்யப்படும் இபாதத்தின் பக்கம் கவனம் ஏற்படும். இதுவே மனிதனின் இறைவன் மீது தூய்மையான உறுதி வைக்கிறார். இபாதத்தின் கடமையை நிறைவேற்றுவதன் பக்கம் முழுமையாக முயற்சி செய்கிறார். இபாதத் இன்றி எனது வாழ்வு மோசமாகி விடும் என்று நன்றாக விளங்கி வைத்திருப்பார். ஏனெனில் இபாதத் குறித்து இறைவன் கூறுகிறான். அதன் கடமையை நிறைவேற்ற வேண்டும். அதன் கடமையை நிறைவேற்றுவதற்கு தொழுகையை நிலைநாட்ட வேண்டும். தொழுகையை நிலைநாட்டுவது என்பதன் பொருள், பள்ளியில் சென்று ஜமாஅத்தாக தொழுவது; இதுவே தொழுகையின் கடமையை நிறைவேற்றுதல் ஆகும். இதனைத் தொடர்ந்து இன்னொரு விஷயம் இங்கு கூறுகிறேன். மக்கள் இங்கு சரியாக தொழுகைக்கு வருவதில்லை. இங்கு நான் மட்டும் கூறவில்லை. இங்குள்ள உள்ளூர் பத்திரிகை எழுதியுள்ளது. தொழுகை ஒரு நேரம் மட்டுமல்ல; ஐந்து நேரமாகும். இந்த பள்ளிவாசல் ஜுமுஆவுக்கு மட்டுமே பயன்படுகிறது. அஹ்மதிகள் ஐந்து வேளை இங்கு

பள்ளிவாசலைத் திறந்து தொழுகையை நடத்த வேண்டும். இது இங்குள்ள அஹ்மதிகளின் கடமையாகும். இஷாவுக்கு மட்டும் வருவது, அல்லது மக்ரிப் தொழுகைக்கு மட்டும் வருவது அல்லது சுபுஹ் தொழுது விட்டு செல்வது போதாது. இந்த கடமையை நிறைவேற்றும் போதுதான் உண்மையான மூஃமின் ஆவீர்கள். மற்றவர்கள் கூட இங்கு ஏன் மஸ்ஜித் கட்டுகிறார்கள் என்று ஆட்சேபனை செய்கிறார்கள். நேற்று முன் தினம் ஒரு பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டியபோது பத்திரிகையாளர்கள் இதே கேள்வியைத் தான் கேட்டனர். பள்ளிவாசலை நீங்கள் கட்டுவது ஏன்? என்கிறனர். இதற்கு சரியான பதில், பள்ளிவாசலில் ஜமாஅத்தாக தொழுவது குறித்து இஸ்லாம் மிகவும் முக்கியத்துவம் தருகிறது. தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்று கூறுகிறது. தொழுகையை நிலைநாட்டுவது என்றால் ஜமாஅத்துடன் தொழுவது ஆகும். அதற்காகத்தான் பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றன. உண்மையான தொழுகைகள் தான் அல்லாஹ்வுக்கும் அடியாருக்கும் இடையிலுள்ள உறவு குறித்து கவனமூட்டுகிறது. அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களுக்கிடையிலுள்ள உறவை நிலைநாட்டுவதில் கவனமிருக்க வேண்டும். அந்த சிந்தனையில்லாமல் செய்யப்படும் தொழுகைகள் ஃபவய்லுல் லில் முஸல்லீன் – தங்கள் தொழுகைகளில் கவனமமற்றுத் தொழுபவர்களுக்கு அழிவுதான் (107:5) அவர்களின் வெளிப்படையான அசைவுகளால் தொழுகின்றனர். அல்லாஹ்வின் கட்டளைகளின் நோக்கத்தை மறந்து விடுகின்றனர். திருக்குர்ஆன் ஒவ்வொரு அடியிலும் கவனமூட்டுகிறது. ஓர் உண்மையான மூஃமினுக்கு உயரிய ஸ்தானம் வரை செல்வதற்கு வழிகாட்டுகிறது. பிறகு ஓர் உண்மையான முஸ்லிம் இறைவனைப் புகழ்பவராக இருப்பார். அல்லாஹ்வை எல்லா பண்புகளின் தொகுப்பு என்று கருதுபவரே உண்மையான பொருளில் இறைவனைப் புகழ முடியும். இறைவனை எல்லாப் பண்புகளின் தொகுப்பாக கருதி அவனது கட்டளையை அமல்படுத்துபவராக இருப்பார். ஒருவர் உண்மையான மூஃமினாக இருந்தால் இறை திருப்தியை விட்டு விலகக்கூடிய காரியத்தை செய்யவே இயலாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** ஹம்து (புகழ்தல்) என்றால் என்ன என்பது குறித்து ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

ஹம்து உடைய எல்லா வகைகளும், அது வெளிப்படையாக இருந்தால் என்ன? மறைமுகமாக இருந்தால் என்ன? அல்லது அவனது பண்புகளின் முழுமைத்தன்மையாக இருந்தால் என்ன? இயற்கையின் அற்புதங்களாக இருந்தால் என்ன? இவற்றில் எதற்காக ஒருவர் புகழ வேண்டியிருந்தாலும் அப்புகழ் முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்கே உரியனவாகும். அல்லாஹ்வைப் பற்றி ஒருவர் முழுமையாக சிந்தித்தால் அவர் ஸஜ்தாவில் வீழ்ந்து விடுகிறார். வீட்டிலிருந்து அவர் வெளியேறினாலும் அவனது திருப்தியைப் பெறவே வெளியேறுவார். இம்மக்களே நன்மையைப் பரப்புபவர்களாவர். தீமையிலிருந்து தடுப்பவர்கள் ஆவர். இறைவனின் வரம்புகளை பாதுகாப்பவர்களாவர். அல்லாஹ்வின் வரம்புகள் என்றால் என்ன? திருக்குர்ஆனில் மூஃமின்களுக்கு அல்லாஹ் விதித்துள்ள கட்டளைகள், வரம்புகளுக்குள் நிற்பதே ஒரு முத்தகியின் பணியாகும். பிறகு அல்லாஹ் அத்தகைய மக்களுக்கு நற்செய்தி வழங்குகிறான். இந்த எதிர்ப்பின் கூச்சல் அவர்களை ஒன்றும் செய்ய இயலாது.

இவ்விஷயத்தில் நான் இன்னொன்றும் கூற விரும்புகின்றேன். அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வின் வழியில் பொறுமை காட்டுபவர்களுக்கு நற்செய்தி உள்ளது. அல்லாஹ்விற்காக வெளியேறுபவர்கள், தப்லீக் வேலையில் ஈடுபடுபவர்கள் ஜிஹாது செய்பவர்களாவர். எனவே அதற்கு இறைவன் கட்டளையிட்டுள்ளான். அத்துடன் இன்னொரு பிரிவினர் பொறுமையாளர்களுள் அடங்குவர். அவர்கள் யாரெனில் அவர்களுக்கு அந்நாட்டில் மார்க்கத்தை பேணுவதற்கு சிரமம் தரப்படுகிறது. அதற்காக ஹிஜ்ரத் செய்ய வேண்டிய நிலையில் அவர்கள் இருப்பர். எனவே அதுவும் அல்லாஹ்வின் கட்டளையாகும். மார்க்கத்திற்காக கஷ்டம் தரப்பட்டால் ஹிஜ்ரத் செய்து விடுங்கள். உங்களுள் பலர் அந்த காரணத்தால் இங்கு வந்தவர்களேயாவர். ஜெர்மனிய அரசு, உங்களுக்கு உங்கள் நாட்டில் சுதந்திரம் இல்லை என்பதை புரிந்து கொண்டு உங்களுக்கு கஷ்டம் தரப்படுகிறது என்று உணர்ந்து இங்கு தங்கியிருப்பதற்கு அனுமதி அளித்துள்ளது. அது ஜெர்மனிய அரசின் பெருந்தன்மை ஆகும். எனவே நீங்கள் இறை திருப்தியைப் பெற வேண்டும் எனில் உண்மையான அஹ்மதி என்று அழைக்கப்படுவதை விரும்புகிறீர்கள் எனில் அல்லாஹ்வுடைய இவ்வுலக மறு உலக வெகுமதிகளைப் பெற விரும்புகிறீர்கள் எனில் அதனை உங்கள்

சந்ததிகளிலும் இறங்குவதைக் காண விரும்புகிறீர்கள் எனில் இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் தொழுகையை நிலைநாட்ட வேண்டும். உங்கள் ருகூவு, ஸுஜூது (குனிதல், சிரம் பணிதல்) மூலம் முழுமையான கட்டுப்படுதலை வெளிப்படுத்த வேண்டும். நன்கைளை உங்கள் மீது கடமையாக்கிக் கொள்ள வேண்டும். சமூகத்திலும் அந்த நேர்மையைப் பரப்ப வேண்டும். தீமைகளிலிருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதுடன் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இறைவனது எல்லா கட்டளைகளின்படியும் முடிந்தவரை அமல் செய்ய வேண்டும். உங்கள் சந்ததிகளுக்கும் இஸ்லாத்தின் உண்மையன போதனைகளால் வெளிச்சமூட்ட வேண்டும். இது உங்களிடம் இல்லையெனில், உங்கள் போதனை என்னவென்று எமக்கு தெரியாது. உங்கள் நடவடிக்கைகளைப் பார்த்து உங்கள் மார்க்கத்தை நாங்கள் அனுமானிக்கிறோம் என்று இஸ்லாத்தின் எதிரிகள் கூறி விடுவர். ஆகவே ரோஷமுள்ள ஓர் அஹ்மதி போன்று நடந்து கொள்ள வேண்டும். எப்போதும் அஹ்மதிய்யத்திற்கும் இஸ்லாத்திற்கும் அவப்பெயர் ஏற்படுத்தாமல் இருங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வேதனையை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

என்னோடு தொடர்புடையவராக உங்களை கூறிக் கொண்டு பிறகு எனக்கு அவப்யெரை ஏற்படுத்தாதீர்கள். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் சிந்திக்க வேண்டும். நம்மை இந்த நாட்டிற்கு வரச் செய்து நமது நிலைமையை முன்னரை விட சிறப்பானதாக இறைவன் ஆக்கினான். சுதந்திரமாக வாழ்வதற்கான வாய்ப்பையும் அல்லாஹ் நமக்கு அஹ்மதிய்யத்தின் காரணத்தால் தந்துள்ளான். எனவே நான் இறைவனுக்கு நன்றி செலுத்தும் அடியானாகவும் அவனது திருப்தியைப் பெறுபவனாகவும் ஆக வேண்டும். அதே வேளையில் இஸ்லாத்தின் எதிரிகளின் வாயை அடைப்பவனாகவும் ஆக வேண்டும்.

நன்மை ஏவுதல் எனது தனி சிறப்பாகவும், தீமையைத் தடுத்தல் என் கண்டறியத்தக்க ஓர் அடையாளமாகவும் ஆக வேண்டும் என்ற உணர்வு அஹ்மதிகளிடம் இருக்க வேண்டும். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு ஒரு தனி மதிப்பு வைத்துள்ளான். அதனைப் பாதுகாக்க அஹ்மதிகளாகிய நாம் முழுமையாக முயற்சி செய்வோம் என்று உறுதி எடுக்க வேண்டும்.

அல்லாஹ் நமக்கு தந்த மதிப்பு,**குன்(த்)தும் (kh)கய்ர உம்ம(த்)தின் உ(kh)க்ரிஜத் லின்னாஸ்** – மக்களு(டைய பயனு)க்காகத் தோற்றுவிக்கப்பட்ட நீங்கள் சிறந்த கூட்டத்தினர்களாவீர்கள். (3:111)

அதாவது நீங்கள் உங்கள் நன்மைக்காக மட்டுமின்றி மற்றவரின் நன்மைக்காகவும் படைக்கப்பட்டுள்ளீர்கள். யார் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதெல்லாம் ஒருபுறமிருக்க இன்று மனித குலத்தின் நலன் உங்களோடு சம்பந்தப்பட்டுள்ளது. இது எத்துணை பெரிய கண்ணியம்! இது வெறுமனே கிடைத்து விடுமா? இல்லை. காரணம், இவ்வாறு கூறப்பட்டுள்ளது. நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள். தீமையைத் தடுக்கின்றீர்கள்.

நமக்குள் இந்த நன்மையிருக்கும் எனில் அஹ்மதிகளிடம் இறைவன் திருக்குர்ஆனில் கூறிய நன்மைகள் தென்படத் தொடங்கினால்தான் பிறகு நாம் மற்றவருக்கு பயன் தருபவர் ஆகலாம். பிறகு நாம் அந்த மதிப்புக்குரியவர்களாவோம்.

அஹ்மதிகள் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்ததன் மூலம் பெரும் பொறுப்பு அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. உலகில் இஸ்லாத்திற்கு எதிராக வெறுப்பின் சுவர் எழுப்பப்படுகிறது. அவற்றை வீழ்த்துவது அஹ்மதிகளின் கடமையாகும். நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதன் மூலமே அச்சுவரை வீழ்த்த வேண்டும். இபாதத்தின் தகுதியை உயர்த்துவதன் மூலமே வீழ்த்த வேண்டும். மஸ்ஜிதுகளை நிரப்புவதன் மூலமே அதனை வீழ்த்துங்கள். அல்லாஹ்வின் நன்றியுள்ள அடியாராகித்தான் அதனை வீழ்த்த வேண்டும்.

இக்காலத்தின் இமாமை கண்டறியவும், (அவர்களை) ஏற்றுக் கொள்ளவும் நமக்கு அவன் வாய்ப்பளித்துள்ளான். பூமியில் உங்களுக்கு நெருக்கடி தரப்பட்ட போது உலகில் பரவ அவன் உங்களுக்கு வாய்ப்பு தந்தான். அதற்காக அல்லாஹ்வுக்கு இபாதத் செய்வதில் மேலும் கவனம் செலுத்துங்கள். உங்களது

எந்த திறமையாலும் நீங்கள் உலகில் நிலைநிற்கவில்லை. மாறாக, அல்லாஹ்வின் அருளால் நிலைநிற்கின்றீர்கள். சிலர் வெறுப்பின் சுவரை எழுப்பும்போது, அஹ்மதி இமாம் இருந்து இஸ்லாத்தின் அழகிய போதனையை நம்முன் எடுத்து வைத்தார்கள். இஸ்லாத்தை பாதுகாக்குமாறு அறிவுறுத்தினார்கள். மஸ்ஜிதுகள் கட்டப்படுவதன் தத்துவம் என்ன என்று உலகிற்கு செய்து காட்டுங்கள். அதன் பொருட்டே அல்லாஹ் உங்கள் மீது அருள் செய்தான்.

வாருங்கள்! மினாராக்கள் கட்டுவதன் தத்துவம் என்னவென்று உலகிற்கு செய்து காட்டுங்கள். வாருங்கள்! உயர் நல்லொழுக்கம் என்றால் என்னவென்று நாங்கள் காட்டுகிறோம் என்று கூறுங்கள். வாருங்கள்! நன்மை எவ்வாறு பரவுகிறது? தீமை எவ்வாறு விலகுகிறது? என்று காட்டுகிறோம். வாருங்கள்! உலகின் அமைதியை எப்படி நிலைநாட்டுவது என்று நாங்கள் சொல்லித் தருகிறோம் என்று அவர்களுக்கு கூறுங்கள். நம்மீது மிகப் பெரும் பொறுப்பு இப்போது சுமத்தப்பட்டுள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத் உலகின் முன் எடுத்து வைத்ததுதான் உண்மையான இஸ்லாம் என்று உலகிற்கு கூற வேண்டியுள்ளது. அதனைப் பரப்புவதற்காக ஒவ்வொரு அஹ்மதி ஆண், பெண், சிறுவர், முதியோர், இளைஞர் அனைவரும் தமது பொருள், உயிர், கண்ணியத்தை தியாகம் செய்வதற்கு உறுதி எடுக்கிறார்.

நாம் நம்மை மற்ற முஸ்லிம்களை விட்டும் பிரித்தறியத்தக்க நிலையில் வைக்கவில்லை எனில் இஸ்லாத்திற்காக எவ்வாறு தற்காப்பு செய்ய முடியும்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நான் மீண்டும் மீண்டும் பலமுறை கூறி விட்டேன். வெளிப்படையான முறையில் மற்ற முஸ்லிம்களும் நாமும் ஒன்றுதான். நீங்களும் முஸ்லிம்கள், அவர்களும் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றனர். நீங்களும் கலிமா சொல்கிறீர்கள்; அவர்களும் கலிமா சொல்கிறார்கள். குர்ஆனைப் பின்பற்றுவதாக நீங்களும் வாதிக்கின்றீர்கள்; அவர்களும் குர்ஆனைப் பின்பற்றுவதாக வாதம் செய்கின்றனர். சுருக்கமாக, வாதத்தின் அடிப்படையில் நீங்களும் அவர்களும் சமம்தான். ஆனால் வெறும் வாதத்தால் அல்லாஹ் மகிழ்ச்சியடைவதில்லை. உண்மை அத்துடன் ஒன்றிணையவில்லை எனில் வாதத்திற்கு செயல் வடிவம் இல்லையெனில் மாற்றப்பட்ட நிலைக்கு ஒரு ஆதாரமே இல்லை. கய்ர உம்மத் ஆவதற்கு உண்மையான போதனையை எடுத்து வைப்பதற்கு செயல் வடிவம் தேவை. நமது நிலையை மாற்ற வேண்டும். நமது இபாதத்தின் தகுதியை உயர்த்த வேண்டும். நமது உயர் நல்லொழுக்கத்தை உயர்த்த வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு, நேசம், சகோதரத்துவத்தை உருவாக்க வேண்டும். அல்லாஹ் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

இந்த பள்ளிவாசல் சம்பந்தமான இன்னொரு விஷயம் கூற விரும்புகிறேன். இது கட்டப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. பொதுவாக திறப்பு விழாவிற்குப் பிறகும் சில மஸ்ஜிதுகள் சிறியவையாகவே உள்ளன. எனினும் இப்போது மஸ்ஜிதுகளுக்குள் Reception நடத்தப்படும் வழக்கம் உள்ளது. பாயை விரித்து பள்ளிக்குள் விருந்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுகின்றன. **இனி வருங்காலத்தில் இதற்கு அனுமதியில்லை.** மஸ்ஜிதுடைய Reception செய்ய வேண்டியதிருந்தால் பள்ளிவாசலின் வளாகத்தில் ஒரு கூடாரம் அமைத்து அதனை செய்யலாம். பள்ளிவாசலின் உட்புற அறையில் இனி உணவு பரிமாறுதல் போன்றவை இனி நடத்தக் கூடாது. நீங்களும் இதனை கவனியுங்கள். உலகிலுள்ள மற்ற பகுதிகளிலும் இதனை கவனத்தில் கொள்ளுங்கள்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUN NOOR MOSQUE, FRONKFORD, GERMANY
ON 18.12.2009

Translated by : **Muallim M. NIZAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**